# இனமானப் பேராசிரியரின் 102-வது பிறந்தநாள் திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மலரஞ்சலி மரியாதை!



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நேற்று இனமானப் பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார், மாவட்ட சிறுபான்மையினர் நல பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா, மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நேற்று இனமானப் பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டுஅவரது உருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.அருகில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், பேரணாம்பட்டுநகர கழக செயலாளர் ஆலியார் ஜ௳பேர்அகமத், ஒன்றிய கழக செயலாளர்கள் ஞானசேகரன், குமர பாண்டியன், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன்,பகுதி செயலாளர்கள் சி.எம்.தங்கதுரை, வீ.ஜி.கே.சுந்தரவிஜி, முரளி கிருஷ்ணா, தி.அ.முனவர் பாஷா சத்திய மூர்த்தி, தயாள் ராஜ், மாமன்ற உறுப்பினர் சந்திரசேகர், வீ.எஸ்.முருகன், ஜெய்சங்கர், கா.சு.சண்முகம் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.தேவராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.ஏ.பாலாஜி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இனமான பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாலை ராஜா,விஜிலா சத்யானந்,சுரேஷ்,தர்மன்கிரிஜா குமார்,சரவணன்,ராஜ்,பரமசிவம் ஐயப்பன்,பூக்கடை அண்ணாதுரை,மீரான் மைதீன், ராஜவர்மன்,காமினி தேவன், கந்தசாமி,அனிதா,கல்லூர் பாலா, உலகநாதன் சுரேஷ் அருள் இளங்கோ,சைபுநிஷா,தேவிகா, அருணாசலதேவி,பூங்கனி, ஹமிதா,ஜோதி பிரியா,பவானி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நேற்று இனமானப் பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது, திருஉருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் திருப்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ஆர்.திருப்பதி மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அண்ணாரின் திருவுருவப்படத்திற்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.




### அம்பேத்கரை விமர்சித்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவை

# எடப்பாடி பழனிசாமி கண்டிக்காதது ஏன்?

## அமைச்சர் கோவி.செழியன் கண்டனம்!

சென்னை, டிச. 20-

தி.மு.க. வர்த்தகர் அணி துணைத் தலைவர் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வெளியிட்ட சமூக வலைதள பதிவு வருமாறு:

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களை, #INDIA கூட்டணி உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துச் சனநாயகச் சக்திகளும் கண்டித்திருக்கும் வேளையில், அ.தி.மு.க. தலைமை மவுனம் காப்பது ஏன்?

அண்ணல் அம்பேத்கரை விமர்சித்த அமித்ஷாவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நேரடியாக கண்டிக்காதது ஏன்?

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அமித்ஷா அவர்களுடன் சேர்ந்து அண்ணல் அம்பேத்கரை அவமதிக்கிறாரா? இல்லை அமித்ஷாவின் கருத்தை ஆமோதிக்கிறாரா?

அண்ணா. தி.மு.க., அமித்ஷா.தி.மு.க. என மாறிவிட்டதால்தானே அண்ணல் அம்பேத்கர் விஷயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமைதி காக்கிறார்.

மீண்டும் பா.ஜ.க.வோடு கூட்டணி சேரும் முயற்சி களில் அவர் மும்முரமாக இருக்கிறார்.

“அ.தி.மு.க. அழியாமல் இருக்க வேண்டுமென்றால், பா.ஜ.க. கூட்டணிக்கு வர வேண்டும்” என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் கருத்து தெரிவித்திருந்தார்.

“அ.தி.மு.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைப்பீர்களா?” என்ற கேள்விக்கு “இல்லை” என்று பதில் சொல்லாமல் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, “பொறுத்திருந்து பாருங்கள்” என சிக்னல் காட்டியிருக்கிறார்.

அதனால்தான், கூட்டணிக்கு எங்கேயும் பங்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காக அம்பேத்கர் அவமதிப்பைக் கண்டிக்கத் துணிவில்லாமல் இருக்கிறாரா எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள்!

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்துப் போராட்டம்!

## பெரம்பலூரில் பொன்.குமார் அறிவிப்பு

பெரம்பலூர், டிச.20-

ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் போராட்டம் நடத்த உள்ளதாக அதன் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவருமான பொன். குமார் பெரம்பலூரில் தெரிவித்தார்!

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி மற்றும் தமிழக கட்டுமான அமைப்புச்சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் உலக புலம்பெயர்வோர் தின நிகழ்ச்சி மற்றும் மாவட்ட பொதுக்குழு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றது.

அதன் அமைப்புச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன்.குமார், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.

அப்போது தமிழக அரசின் சார்பில், தொழிலாளர்களுக்கும் கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் நல வாரியம் ஏற்படுத்தி நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதையும், தமிழக அரசின் சாதனைகளையும் பட்டியலிட்டனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார், தமிழகத்திலிருந்து பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏராளமான தொழிலாளர்களும், படித்த இளைஞர்களும் வேலைக்காக வேண்டி புலம் பெயர்ந்துள்ளனர். அவ்வாறு செல்பவர்களை அதன் ஏஜெண்டுகள் சுற்றுலா விசாவில் அழைத்துச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கி அவர்களை சிரமத்திற்கு ஆளாக்கி வருகின்றனர்.



மேலும் அவர்களுக்கு பேசப்பட்ட சம்பளத்தையும் கொடுப்பதில்லை, விசாவை வாங்கி வைத்துக் கொண்டு சொந்த ஊருக்கும் அனுப்பி வைப்பதில்லை. அதனால் அவர்களது குடும்பமும் பாதிக்கப்படுகிறது.

இதற்காக தமிழகத்தில் உள்ளதை போல வெளிநாடு வாழ் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு சென்று பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு பல்வேறு விதமான உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக டிசம்பர் 18 ஆம் தேதி உலக புலம்பெயர்வோர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதையே நாம் இன்று கொண்டாடி வருகிறோம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டிற்கு பல லட்சம் கோடி அந்நிய செலாவணி வருமானம் வருகிறது. ஆனால் அவ்வாறு அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் தொழிலாளர்களுக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் 1983 &ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வெளிநாடு வாழ் தொழிலாளர்களுக்கான சட்டத்தில் பல்வேறு திருத்தங்களை கொண்டு வர உள்ளதாக ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாக கூறி வருகிறார்கள். ஆனால் அதனை அவர்கள் செயல்படுத்தவில்லை. எனவே இதனைக் கண்டித்து விரைவில் மிகப் பெரிய அளவில் தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் போராட்டம் நடத்த உள்ளோம் என்று தெரிவித்தார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 18.12.2024 அன்று தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைப்பு சார் தொழிலாளர்களின் குடும்பத்தினர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லத்தினை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன் துவக்கிவைத்து தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் வீரராக ராவ்,மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் விஷ்ணு சந்திரன்,சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார், ராஜா,சதன் திருமலை குமார் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் உட்பட பலர் உள்ளனர்.

